**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.246 /2017**

**Deposition of P.W. 3**

Name : சுனிதா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.01.2025**

A1, A3 to A6 Present. A2, A7 absent. Peittion filed and allowed

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது பார்வதிபுரத்தில் வசித்து வருகிறேன். சம்பவ சமயம் முட்டைக்காட்டில் வசித்து வந்தேன். அ.சா.2 எனது கணவர். எனது கான்டிராக்ட் வேலை பார்த்து வருகிறார். ஆஜர் எதிரிகளையும் ஜாண் மெக்டியார், செல்வின் ஆகியவர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் எனது கணவரை 31.07.2011ம் தேதி காலை 08.20 மணிக்கு முட்டைக்காடு பி.எம்.எஸ் ஓட்டல் முனபாக வைத்து கடத்தி சென்று விட்டார்கள். எதிரி ஜாண்மெக்டியார் தலைமையில் ஆல்பர்ட் மற்றும் மற்ற எதிரிகள் அனைவரும் சேர்ந்து ஆல்பர்ட் கத்தியை காட்டி மிரட்டி நீ மெக்டியார்க்கு பணம் கொடுக்க மாட்டாயா, நான் மெக்டியார்க்கு அடி ஆளாக இருக்கும் போது நீ எப்படி சுற்றி திரிவாய் என்று சொல்லி கழுத்தில் கத்தியை வைத்து எங்களிடமிருந்து தப்பிக்க நினைத்தால் கழுத்தை அறுத்து கொன்று விடுவோம் என்று மிரட்டினார். ஜாண் மெக்டியார், எனது கணவரின் லூங்கியை உருவி வீசினார். எனது கணவர் அரை நிர்வாணமாக அப்போது நின்று கொண்டிருந்தார். மற்ற எதிரிகள் கையும், காலும் பிடித்து வலுகட்டாயமாக தூக்கி காருக்குள் அடைத்து கடத்தி சென்று விட்டார்கள். KL 03 A 2673 என்ற எண் கொண்ட அம்பாசிடர் காரில் கடத்தி சென்றார்கள். நான் மேற்படி சம்பவத்திற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. பெயிண்ட் வாங்கிய வகையில்

கொடுக்க வேண்டிய பணத்திற்காக கடத்தி கொலை செய்ய வேண்டும் என்பதற்காக கடத்தியதாக சொன்னார்கள். சிறிது நேரத்தில் எனது கணவரை மீட்டு கொண்டு வந்தார்கள். செல்போண்–1, ரூ.2,000/–, வெள்ளை நிறத்தில் கறுப்பு கரையுடன் கூடிய கட்டம் போட்ட லூங்கி ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் கணவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சம்பவ இடத்தில் நிற்கும் போது போலீசார் வரவில்லை. நான் புகாரை வீட்டில் வைத்து எழுதினேன். சம்பவம் முடிந்த உடன் நான் வீட்டிற்கு சென்று தான் புகாரை எழுதினேன். கொற்றிக்கோடு காவல்நிலையம் எங்கள் வீட்டிலிருந்து 7 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. 1 கி.மீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு ஆட்டோவில் போனேன். எதிரிகளின் பெயர் ஏற்கனவே எனக்குத் தெரியும். புகார் கொடுத்து விட்டு காவல்நிலையத்திலிருந்து சென்று விட்டேன். நான் காவல்நிலையம் செல்லும் போது இவ்வழக்கு தொடர்பாக பெண் ஒருவரை கைது செய்து வைத்திருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. நான் புகாரை கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். உதவி ஆய்வாளர் மீது நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் சொன்னது போல் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் 1 கி.மீ தூரத்திற்கு குறைவாக தான் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து நான் வீட்டிற்கு தான் போனேன். புகார் மனுவை வீட்டில் வைத்து தான் எழுதினேன். புகார் எழுத ¼ மணி நேரமானது. வயதை யார் எழுத சொல்லி தந்தது என்றால் நானாக தான் எழுதினேன். 27/11 என்றால் 2011 என்று அர்த்தம். என் கணவரை அடித்து போட்டதாக சொன்னதன் பேரில் பார்க்க போனேன் என்றால் இல்லை. என் கணவரிடம் சாவியை கொடுக்க சென்ற போது நான்

சம்பவத்தை பார்த்தேன். கொற்றிக்கோட்டில் உள்ள தேவாலயத்தில் 6 மணி முதல் 7 மணிக்குள் ஆராதனை முடிந்து விடும் என்றால் 2வது ஆராதனை 08.30 மணிக்கு தொடங்கும். வழக்கிற்காக தேவாலயத்திற்கு போனதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு 09.00 மணியிலிருந்து 09.30 மணிக்குள் போனேன். 09.30 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும் போது எத்தனை போலீசார் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். மதியத்திற்கு முன்பாக எனது கணவரை மீட்டு கொண்டு வந்தார்கள். அப்போது அருள்றோஸ் சிங் என்ற உதவி ஆய்வாளர் இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயம் எங்களுக்கு கொற்றிக்கோட்டில் 2 வீடுகள் இருந்தது என்றால் முட்டைக்காட்டில் வீடு இருந்த விபரம் தெரியும் . காவல்நிலையம் அருகே வீடு இருந்த விபரம் தெரியாது. எங்களுக்கு சொந்தமான வீட்டில் உதவி ஆய்வாளர் வாடகைக்கு இருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கும், என் கணவருக்கும் சட்டவிரோதமாக உதவி செய்தார்கள் என்பதற்காக 8 நாட்களில் பணி மாறுதல் செய்யப்பட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தற்பாது நானும், என் கணவரும் பார்வதிபுரத்தில் தான் இருக்கிறோம். என் கணவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஒரு நபரை ரூ.35,00,000/–ற்கு ஏமாற்றி வழக்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் வழக்கு உள்ளது. புகார் கொடுப்பதற்கு முன்பு நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. புகார் கொடுத்து விட்டு வந்த பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. நான் கடத்தல் சம்பவத்தை தடுக்க முயற்சி செய்யவில்லை. ஆனால் சத்தம் போட்டேன்.

நான் சொன்னது போல் சம்பவம் நடக்காததால் தான் நான் அதனை தடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் நாங்கள் வசிக்கும் பகுதியை சேர்ந்த நபர்கள் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. உதவி ஆய்வாளர் சொல்லி கொடுத்ததின் பேரில் எழுதப்பட்ட புகார் மனு என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும்., காவல்நிலையத்திற்கும் 250 மீட்டர் தொலைவு உள்ளது என்றால் தெரியாது. உண்மையில் சம்பவத்தைநான் பார்த்திருந்தால் நான்நேரயடிாக காவல்நிலையம் சென்றிருப்பேன் என்றால் எனக்கு சிறு குழந்தைகள் இருந்ததால் அவர்களை வீட்டில் விடுவதற்கு போனேன். எனது பிள்ளைகளும் அதனை பார்த்தார்கள். 1 வயது, 2 வயது என்பதால் போலீசார் அவர்களை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தின் அருகே நிறைய கடைகளும், வீடுகளும், மருத்துவமனையும் உள்ளன. நான் சொன்னது போல் சம்பவம் நடந்திருந்தால் பொது மக்கள் தடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடக்காததால் யாரும் வந்து தடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து பி.எம்.எஸ். டீ கடைக்கு இடையே 10 டீக்கடைகள் உள்ளன என்றால் எனது கணவர் பி.எம்.எஸ். டீ கடையில் குடிப்பார். வழக்கிற்காக பொய்யாக பி.எம்.எஸ். டீ கடையில் டீ குடிப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முட்டைக்காடு சந்திப்பிற்கும் பி.எம்.எஸ். டீ கடைக்கும் இடையே 10 அடி தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் பார்க்காததால் 30 அடி தூரத்தில் இருந்து பார்த்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரிடமிருந்து மொபைல் மற்றும் ரூபாய் எடுத்ததை நான் நேரடியாக பார்த்தேன். நான் மேற்படி விபரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை. வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் டீ கடைக்கு

நடந்து போனார். 2வது எதிரியிடமிருந்து பணம் பறிப்பதற்காக உதவி ஆய்வாளருடன் கூட்டு சேர்ந்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து எழுதப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தகுந்த வாய்ப்பு வழங்கப்பட்டது 3வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை, வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசாருடன் என் கணவரை தேடி நான் போகவில்லை. என் கணவரை மீட்ட விபரம் என் கணவருக்கு தெரிந்த நபர் மூலம் எனக்கு தெரிந்தது. யார் எனக்கு அந்த விரத்தை சொன்னார் என்று எனக்கு ஞாபகமில்லை. மதியத்திற்கு முன்னரே எனக்கு தகவல் சொன்னார்கள். புகாரில் 3 முதல் 7 வரையிலான எதிரிகளின் பெயர்கள் இடம் பெறவில்லை. போலீசாரிடம் மற்ற எதிரிகளை நான் அடையாளம் காட்டி கொடுக்கவில்லை. புகாரில் செல்போண் மற்றும் பணம் பற்றிய விபரங்களை குறிப்பிடவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள காரும் சம்பவத்திற்கு பயன்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு எனது கணவரும், காவல் உதவி ஆய்வாளரும் சேர்ந்து போட்ட நாடகம் என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், உதவி ஆய்வாளருக்கும்

கருவியாக இருந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>5வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை

**<u>6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு யாரும் தகவல் கொடுத்தார்களா என்று எனக்குத் தெரியாது. என்னுடன் காவல்நிலையத்திற்கு சம்பவத்தை பார்த்த நபர் ஒருவர் வந்தார். அவர் பெயர் தெரியாது. என்னுடன் ஒரு நபர் வந்த விபரத்தை போலீசாருடன் கூறவில்லை. எந்த ஆட்டோவில் போனேன் என்று எனக்கு விபரங்கள் தெரியாது. ஆட்டோவை என் வீட்டில் உள்ளவர்கள் அழைத்து வந்தார்கள். சம்பவ இடத்திலிருந்து 100–க்கு போண் செய்யவில்லை. எந்த எதிரி வாகனத்தை ஓட்டினார் என்று நான் கூறவில்லை. 6வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரை நான் தான் நிதானமாக எழுதியுள்ளேன். புகாரிலும், போலீசார் விசாரணையிலும் 5 எதிரிகளை தான் சொன்னேன். என் கணவரை கடத்தும் போது 7 பேர் இருந்தார்கள். நீதிமன்றத்தில் நான் சொன்ன நபர்கள் கடத்தலில் உண்டு. நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் சொன்னது போல் புகார் கொடுக்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.